## சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – பெரம்பலூர் நகராட்சி, இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து 22 கூடுதல் பணியிடங்களை தோற்றுவித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.25** **நாள் 23.02.2009.**

**படிக்கப்பட்டது:**

(1) அரசாணை (நிலை) எண்.136, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 15.11.2006.
(2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.21431/07/எச்1, நாள் 22.01.2008 மற்றும் 28.08.2008.
(3) அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.09.2008.
(4) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.21431/07/எச்1, நாள் 29.01.2009.

----

**ஆணை:–**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பெரம்பலூர் நகராட்சி இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் பெரம்பலூர் நகராட்சி இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோதிலும் அந்நகராட்சிக்கான பணியிட குறியீட்டின்படி (norms) பணியிடங்கள் இன்னும் புதிதாக தோற்றுவிக்கப்படவில்லை என தெரிவித்து, நகராட்சியின் பணியிட குறியீட்டின்படி நிர்வாகத்தை சிறப்பாக செயல்படுத்த கூடுதலாக 142 பல்வேறு பணியிடங்களை தோற்றுவித்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியிருந்தார்.

2. பெரம்பலூர் நகராட்சிக்கு கூடுதல் பணியிடங்கள் தோற்றவிக்கக் கோரும் செயற்குறிப்பு தொடர்பாக பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட செயற்குறிப்பில் தெரிவிக்கப்பட்ட 142 பணியிடங்களை குறிப்பிட்டு தற்போது நிர்வாக நலன் கருதி தேவைப்படும் 22 பணியிடங்களை அனுமதிக்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில் பணியாளர் குறியீட்டுக் குழுவின் (Norms Committee) பணியிடங்கள் தோற்றுவித்துக் கொள்ள அனுமதி கோரி அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், பெரம்பலூர் மூன்றாம்நிலை நகராட்சியாக இருந்தபோது அனுமதிக்கப்பட்ட பணியிடங்களே தற்போது உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இந்நகராட்சியில் இரண்டாம்நிலை நகராட்சிக்குரிய பணியிடங்களுக்கான குறியீட்டின்படி புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை.

.2..

இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபின், இரு உதவி பொறியாளர் பணியிடங்கள் மட்டுமே புதியதாக தோற்றுவித்துக் கொள்ள பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி மாவட்ட தலைநகரில் இருப்பதால், பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப திட்டப்பணிகள் செயலாக்கம், மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் போன்றவைகளை தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு செவ்வனே செய்ய இயலவில்லை. பெரம்பலூர் நகராட்சி, மாவட்டத் தலைநகரில் உள்ளதால் போதுமான பணியாளர்களின்றி நகராட்சியின் இன்றியமையான பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. பணியாளர் குறியீட்டு குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட இன்றியமையாத பணியிடங்கள் உடனடியாக தோற்றுவிக்க அரசின் அனுமதி தேவைப்படுகிறது. மேற்காணும் 22 கூடுதல் பணியிடங்களைத் தோறுவிப்பதன் மூலம் மொத்த வருவாயில் செலவினம் 17 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது என பெரம்பலூர் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். ஏனவே, பெரம்பலூர் நகராட்சியின் நிர்வாக நலன் கருதி, மிக இன்றியமையாத, உடன் தேவைப்படும் 22 கூடுதல் பணியிடங்களை பணியாளர் குறியீட்டு குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி தோற்றுவித்துக்கொள்ள அனுமதி அளிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பணியாளர் குறியீட்டுக் குழுவின் (Norms Committee) அறிக்கையின் மீது முடிவெடுத்து அதன் மீது இறுதி ஆணை வெளியிட சில காலங்கள் ஆகலாம் என கருதப்படுகிறது.

5. மேற்கூறிய சூழ்நிலையில், அரசு கவனமுடன் பரிசீலித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, பணியாளர் குறியீட்டுக் குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி, மாவட்ட தலைநகராக உள்ள பெரம்பலூர் நகராட்சியின் நிர்வாகத்தை தங்கு தடையில்லாமல் செம்மையாக நடத்திடவும், திட்டப்பணிகளை நிறைவேற்றவும், போதிய பணியாளர்கள் இல்லாததால், நகராட்சிப்பணிகள் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு இதனை சிறப்பினமாக கருதி கீழ்க்காணும் இருபத்திரெண்டு பணியிடங்களை தற்காலிகமாக ஒருவருட காலத்திற்கு ஏற்படுத்திக் கொள்ளவும், ஓராண்டு முடிவில் அப்பணியிடங்களுக்கு தொடர் அனுமதி வழங்குவது குறித்து பணியாளர் குறியீட்டுக் குழுவின் (Norms Committee) அறிக்கையின்படி தீர்மானிக்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மேலாளர் | 1 |
| 2. | கண்காணிப்பாளர் | 1 |
| 3. | உதவியாளர் | 1 |
| 4. | இளநிலை உதவியாளர் | 2 |
| 5. | தட்டச்சர் | 1 |
| 6. | புள்ளி விவர குறிப்பாளர் | 1 |
| 7. | வருவாய் ஆய்வர் | 1 |
| 8. | குடிநீர் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 9. | பணி ஆய்வர் | 1 |
| 10. | குழாய் பொருத்துநர் நிலை–1 | 1 |
| 11. | மின்பணியாளர் நிலை–2 | 1 |
| 12. | மின் கம்பியாளர் | 2 |
| 13. | மின்கம்பி உதவியாளர் | 2 |
| 14. | நகரமைப்பு ஆய்வர் | 1 |

| | | |
|---|---|---|
| 15. | சுகாதார ஆய்வர் | 1 |
| 16. | ஓட்டுநர் | 4 (முன்னாள் படைவீரர் நலக் கழகத்தின் (Texco) மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்) |
| | மொத்தம் | 22 |

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.376/FS(P)/09, நாள் 12.02.2009 இசைவுப் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
ஆணையர், பெரம்பலூர் நகராட்சி, பெரம்பலூர்.
மண்டல நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர்
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை – 9.
நகல்:- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்